**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.25/2024** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : | **P.W. 12** |
| | Defence | : | **D.W.** |
| | Court | : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | சுரேஷ் | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **17.03.2025**

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1, 2, 3, 5 எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கரூர் மாவட்டம் தனிப்பிரிவு குற்றபுலனாய்வு துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு பெரம்பலூர் மாவட்டம் விகளத்தூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 22.01.2017 அன்று பெரம்பலூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற விபத்து தகவலின்பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த நல்லதம்பி வயது 65, த/பெ கிருஷ்ணசாமி வடகராம்பூண்டி என்பவரிடம் விசாரித்து பெறப்பட்ட வாக்குமூலத்தின் பேரில் 23.01.2017 அன்று வி.களத்தூர் காவல்நிலைய மனு எண்.7/2017 வழங்கியும் மனு தொடர்பாக விசாரணை செய்து வி.களத்தூர் காவல்நிலைய குற்ற எண்.67/2017 சட்டப்பிரிவுகள். 147, 294(பி), 323, 506(i), இதச பிரிவுகளின் கீழ் 03.03.2017 அன்று 13.30 மணிக்கு வழக்கு பதிவு செய்து கனம் பெரம்பலூர் குற்றவியல்

நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆகும். பின்னர் வழக்கின் புலன்விசாரணை அலுவலராக அன்றைய தினமே 16.30 மணிக்கு சம்பவ இடமான திருவாளந்துறை வெள்ளாற்றுக்கு சென்று சாட்சிகள் பெரியசாமி, வடிவேல், ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்து, சாட்சிகள் நல்லதம்பி, அழகுவேல், ராமர், அழகுதுரை, தங்கம்மாள் , பெரியசாமி, வடிவேல், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகள் கல்யாணசுந்தரம், சாமிதுரை, சாமிதுரை, செல்லதுரை, ஆகியோர்களை திருவாளந்துறை சிவன்கோவில் அருகில்வைத்து 17.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்து, பின்னர் காவல்நிலையம் அழைத்து சென்று நிலைய காவலில் வைத்து தக்கபிணையில் விடுவிக்கப்பட்டது. பின்னர் சாட்சிகள் அழகுவேல், ராமர், ஆகியோர்களிடம் விசாரித்து பெறப்பட்ட மறுவாக்குமூலத்தின் பேரில் வழக்கின் சட்டப்பிரிவுகள் 147, 294(பி), 323, 506(ii) இதச என பிரிவு மாற்றம் செய்து 17.03.2017 அன்று எதிரி அழகுவேல்சாமிஎன்பவரை 17.00 மணிக்கு கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இவ்வழக்கில் காயம் அடைந்த நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்று வாங்கினேன். 27.03.2017 அன்று மருத்துவரை விசாரித்த போது வாதிக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்று வழங்கியதால் வழக்கின் சட்டபிரிவுகள் 147, 294(பி), 325, 506(ii), IPC என பிரிவுமாற்றம் செய்து எதிரிகள் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்த பிரிவு மாறுதல் அறிக்கைகள் அ.த.சா.ஆ.8 மற்றும் அ.த.சா.ஆ-9 ஆகும். மீண்டும் ஆய்வாளர் வழக்கை விசாரணைக்கு எடுத்தபோது என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் மட்டும் தான் மருத்துவமனைக்கு போனேன். பொது நாட்குறிப்பில் குறித்துவிட்டு தான் போனேன். மருத்துவமனையில் நல்லதம்பியை பார்த்தபோது

அவருடன் வேறு நபர்கள் இருந்தார்கள் யார் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் நல்லத்தம்பியை மருத்துவமனையில் பார்த்தபோது சுயநினைவுடன் தான் இருந்தார். புகார் வாக்குமூலத்தை என் கைப்பட நான் தான் எழுதினேன். அதில் நல்லத்தம்பி கையெழுத்து போட்டார். புகாரிலுள்ள விவரங்களின் படி ஏற்பட்ட குற்றங்கள் பிடியாணை உத்தரவு இல்லாமலேயே பிடிக்க கூடிய குற்றங்கள் என்றால் சரிதான். நேரடியாக முதல் தகவல்அறிக்கை பதிவு செய்திருக்கலாம் என்றால் சரிதான். குவிமுச 154 பிரிவின் கீழ் நான் நேரடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாதது குற்றம் என்றால் சரியல்ல. மனு நகல் ரசீது என்னுடைய வழக்கு கோப்பில் இல்லை. 22.01.2017ல் நடந்த சம்பவத்திற்கு 03.03.2017ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். காலதாமதத்திற்கு காரணம் முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடவில்லை.பொது நாட்குறிப்பில் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்தது பற்றி குறித்து இருப்பேன். ஆனால் அது பற்றிய தகவல் முதல்தகவல்அறிக்கையில் இல்லை. நான் உயர்நீதிமன்றத்தில் வாதி போட்ட மனுவில் ஆஜரானேன். மனு ரசீது கொடுத்த பிறகு யார்யாரை விசாரித்தேன் என்று முதல் தகவல்அறிக்கையில் சொல்லவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து 15 நாட்கள் கழித்து தான் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றால் சரிதான். குற்றவியல் நீதித்துறை நடுவர் குவிமுச 164 பிரிவின் கீழ் வாக்குமூலம் வாங்கியது எனக்கு தெரியாது. டிஐஜி-யிடம் இருந்து விசாரணை செய்ய தகவல் வந்த பிறகுதான் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்தேன். மருத்துவர் ஹரிகரன் என்பவரை நான் தான் விசாரித்தேன். அவரிடமிருந்து X-Ray அறிக்கை வாங்கி தாக்கல் செய்யவில்லை. பார்வை மகஜர் நான் தான் எழுதினேன். பார்வை மகஜரில் வெள்ளிக்கிழமை என்றும், நேரமும் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வைமகஜரில் கருவேலமரத்தின் கீழ் புதர்கள் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை வரைபடத்திலும் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. இந்த வழக்கில் நான் சரியாக புலன்விசாரணை மேற்கொள்ளவில்லை என்று துறைரீதியாக எனக்கு

குறிப்பாணை கொடுத்தார்கள். 27.09.2023 ல் நான் கரூரில் வேலை பார்த்தேன். என்னை பெரம்பலூர் வரச்சொல்லி தான் ஆய்வாளர் விசாரித்தார். நல்லத்தம்பி தலையில் காயம் ஏற்பட்டதாக சொல்லவில்லை. சம்பவம் நடந்து முடிந்த பிறகு தான் மகனும், மனைவியும் வந்ததாக அ.சா.1 சொன்னார். நல்லத்தம்பி குவிமுச 164 வாக்குமூலத்தில் உதவி ஆய்வாளர் தன்னிடம் வாக்குமூலம் வாங்கவில்லை என்றும், புகாரிலுள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும், சொல்லியிருந்தால் அது தவறு. 5வது எதிரியிடமிருந்து ஆயுதங்கள் எதுவும் நான் கைப்பற்றவில்லை. வாதிக்கும் எதிரிகளுக்கும்இடம் சம்பந்தமாக சிவில் வழக்கு உள்ளது பற்றி எனக்கு தெரியாது. வடகராம்பூண்டி கிராமத்தில் 22.01.2017 அன்று காலை 9.30 மணியளவில் 1ம் எதிரியின் மனைவி கலைவாணியை நல்லதம்பி அவரது மனைவி தனலெட்சுமி மற்றும் அவரது மகன் அழகுதுரை, பிரகாஷ், சங்கீதா, தங்கம்மாள் ஆகியோர் மீது புகார் கொடுக்கப்பட்டு அதற்கு ராமநத்தம் போலீசார் சிஎஸ்ஆர் ரசீது 15/2017 வழங்கப்பட்டிருப்பது எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் எதிரிகள் வாதியின் மீது கொடுத்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யாக கொடுத்த புகாரை பெற்று வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.